## October 3, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் 2 ஆம் தேதி, நாட்டின் மிகவும் மதிக்கப்படும் இரண்டு தலைவர்களான மகாத்மா காந்தி மற்றும் லால் பகதூர் சாஸ்திரியை நினைவு கூர்கிறது.
   i. உண்மை மற்றும் அகிம்சை கொள்கைகளால் வரலாற்றின் போக்கையே மாற்றிய தேசப்பிதாவின் பிறப்பை காந்தி ஜெயந்தி குறிக்கிறது.
   ii. அதே நாளில், "ஜெய் ஜவான் ஜெய் கிசான்" என்ற சக்திவாய்ந்த முழக்கத்தை வழங்கிய முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாளையும் இந்தியா கொண்டாடுகிறது.
2. சீன ஓபன் டென்னிஸ் போட்டியில் உலகின் நம்பர் 1 வீரர் ஜேக் சின்னர் சாம்பியன் பட்டம் வென்றார். இது அவரது 21-ஆவது பட்டமாகும்.
3. குண்டூரில் நடைபெற்ற 62-ஆவது தேசிய செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழக வீரர் ஜிஎம் ப. இனியன் பட்டம் வென்றார்.
   i. ஆந்திர மாநிலம், குண்டூரில் கடந்த செப். 21 முதல் அக். 1 வரை தேசிய செஸ் போட்டி நடைபெற்றது.
4. தமிழகத்துக்கு ரூ.4,144 கோடி உள்பட ஒட்டு மொத்தமாக 28 மாநிலங்களுக்கு ரூ.1.01 லட்சம் கோடி கூடுதல் வரிப்பகிர்வை மத்திய அரசு புதன்கிழமை விடுவித்தது.
   i. இதையடுத்து, தமிழகத்தில் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி (ஆர்டிஇ) தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடங்களுக்கான இலவச மாணவர் சேர்க்கை தொடங்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்தது. தமிழகம் முழுவதும் உள்ள 8 ஆயிரத்துக்கும் அதிகமான தனியார் பள்ளிகளில் சுமார் 1 லட்சம் இலவச மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ளன.
   ii. முன்னதாக, பண்டிகை காலத்தில் மாநிலங்களின் மூலதன செலவு மற்றும் நிதிநிலையை மேம்படுத்தி நலத்திட்டங்களுக்கு செலவிடும் விதமாக மத்திய அரசு 28 மாநிலங்களுக்கு ரூ.1.01 லட்சம் கோடியை விடுவித்தது.
5. வரும் டிசம்பர் 5-ஆம் தேதி ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் இந்தியா வருகிறார். அப்போது பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்தியா-ரஷியா வருடாந்திரக் கூட்டத்தில் அவர் பங்கேற்க இருக்கிறார்.
   i. ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதைச் சுட்டிக் காட்டி அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்தியா மீது கூடுதல் வரிகளை விதித்துள்ளார். இதனால், இந்திய-அமெரிக்க உறவு பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், ரஷியாவுடனான இந்தியாவின் நெருக்கம் மேலும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், புதின் இந்தியா வருவது இருதரப்பு உறவை அடுத்தகட்டத்துக்கு கொண்டுச்செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   ii. இந்திய-ரஷிய அரசுகளுக்கு இடையிலான குழு கூட்டம் மற்றும் ராணுவம் மற்றும் ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு கூட்டம் ஆகியவை ரஷிய அதிபரின் வருகைக்கு முன்பு நடைபெறவுள்ளது. அப்போது இருதரப்பு இடையே பல்வேறு முக்கிய ஒப்பந்தங்களும் இறுதி செய்யப்படும். புதின்-மோடி சந்திப்பின் போது அந்த ஒப்பந்தங்கள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
6. ஐந்து ஆண்டுகளுக்குப்பிறகு இந்தியா- சீனா இடையிலான நேரடி விமான சேவை அக்.26 முதல் மீண்டும் தொடங்கப்பட உள்ளது.
   i. கடந்த 2020-ஆம் ஆண்டு கரோனா பரவலின்போது சீனாவுடனான விமான சேவை நிறுத்தப்பட்டது. அதே ஆண்டில் கிழக்கு லடாக் எல்லையில் உள்ள

கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா-சீனா ராணுவத்தினர் இடையே ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு இருநாட்டு உறவு மோசமடைந்தது.

ii. அதன் பிறகு பலகட்ட பேச்சுவார்த்தைக்குப் பிறகு எல்லையில் இருதரப்பும் படைகளை திரும்பப்பெற்றன. இதனால் பதற்றம் தணிந்தது.

iii. இப்போது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தியா, சீனாவுக்கு எதிராக தீவிரமான வரிவிதிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில், இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் இணக்கமாக செயல்பட முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக பிரதமர் மோடி அண்மையில் சீனா சென்று ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்றார்.

iv. இதன் பிறகு இந்தியாவுக்கு மீண்டும் நேரடி விமான சேவை தொடங்குவது குறித்து பேச்சு நடத்துவதாக சீன தரப்பு அறிவித்தது. இந்நிலையில், இம்மாத இறுதியில் நேரடி விமான சேவை தொடங்கப்பட உள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது. முதலாவதாக, மேற்கு வங்கத் தலைநகர் கொல்கத்தா-சீனாவின் குவாங்ஷு இடையிலான இண்டிகோ விமான சேவை, அக்.26-ஆம் தேதி தொடங்கப்பட உள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. ஏர் இந்தியா வைப் பொருத்தவரை, நடப்பாண்டு இறுதிக்குள் சீனாவுக்கு நேரடி விமானப் போக்குவரத்தை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. மத்திய பிரதேசத்தில் 6 குழந்தைகள் சந்தேகத்துக்குரிய வகையில் இறந்ததற்கு காரணமாகக் கூறப்படும் 'கோல்ட்ரிஃப்' என்ற இருமல் மருந்தை தமிழகம் முழுவதும் விற்பனை செய்ய மாநில மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம் தடை விதித்துள்ளது. மத்திய பிரதேச மாநிலம் சிந்த்வாரா மாவட்டத்தில் 1 முதல் 7 வயது வரை உள்ள 6 குழந்தைகள் கடந்த 15 நாள்களுக்குள் அடுத்தடுத்து சந்தேகத்துக்குரிய வகையில் உயிரிழந்தன.

i. அதேபோன்று மறு உத்தரவு வரும் வரை காஞ்சிபுரத்தில் செயல்படும் அதன் உற்பத்தி நிறுவனத்திலிருந்து அந்த மருந்துகளை வேறு எங்கும் விநியோகிக்கக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

8. ஆர்எஸ்எஸ் அமைப்பின் நூற்றாண்டு கால பயணத்தை நினைவுகூரும் வகையில், மத்திய அரசின் சார்பில் சிறப்பு தபால் தலை மற்றும் ரூ.100 சிறப்பு நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிட்டார்.

i. இந்த நாணயத்தின் ஒரு பக்கத்தில் தேசிய சின்னமும், மறுப்பக்கத்தில் வரத முத்திரையில் சிங்கத்துடன் நிற்கும் பாரத மாதாவுக்கு ஆர்எஸ்எஸ் தொண்டர்கள் வணக்கம் செலுத்துவது போன்ற உருவமும் இடம்பெற்றுள்ளன. சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் பாரத மாதா உருவம் தாங்கிய இந்திய நாணயம் வெளியிடப்பட்டது இதுவே முதல் முறை.

9. இந்தியா, ஐரோப்பிய தடையற்ற வர்த்தக கூட்டமைப்பு (இஎஃப்டிஏ) இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதன் கிழமை (அக்.1) அமலுக்கு வந்தது.

i. ஐரோப்பிய தடையற்ற வர்த்தக கூட்டமைப்பில் ஐஸ்லாந்து, லீக்டென்ஸ்டைன், நார்வே, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

ii. இந்தக் கூட்டமைப்புக்கும், இந்தியாவுக்கும் இடையே கடந்த ஆண்டு மார்ச் மாதம் வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தம் என்ற விரிவான தடையற்ற ஒப்பந்தம் கையொப்பமானது.

iii. இந்த ஒப்பந்தத்தின் கீழ், அந்தக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகள் இந்தியாவில் 15 ஆண்டுகளில் 100 பில்லியன் டாலருக்கு (சுமார் ரூ.8.80 லட்சம் கோடி) முதலீடு செய்ய உறுதிமொழி அளித்துள்ளது.

iv. அத்துடன் ஸ்விட்சர்லாந்து கை கடிகாரங்கள், சாக்லேட், வைரங்கள்

போன்றவற்றை குறைந்த வரியுடன் அல்லது வரிவிலக்குடன் இந்தியாவில் இறக்குமதி செய்ய வழிவகுக்கும் அந்த ஒப்பந்தம் புதன் கிழமை அமலுக்கு வந்தது.

10. சர் கிரீக் செக்டாரை பாகிஸ்தான் கைப்பற்ற நினைத்தால் வரலாற்றையும் புவியியலையும் மாற்றும் அளவுக்கு கடும் பதிலடி தரப்படும் என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரித்தார்.
    i. குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத் தில் இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளள புஜ் பகுதியில் ராணுவ வீரர்களுடன் தசரா பண்டிகை கொண் டாட்ட நிகழ்ச்சியில் ராஜ்நாத் சிங் பங் கேற்றார்.
    ii. குஜராத்தின் கட்ச் பகுதி-பாகிஸ்தான் இடையே அமைந்துள்ள 96 கி.மீ. தொலைவுடைய சர் கிரீக் செக்டாரில் கடல் எல்லை தொடர்பாக இருநாடு களிடையே நீண்டகாலமாக பிரச்னை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

11. மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் அளித்த தரவுகளின் அடிப்படையில், கடந்த 2023-ஆம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற பல்வேறு குற்றங்கள் குறித்த அறிக்கையை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ளது.

| 2023-இல் பதிவு செய்யப்பட்ட பல்வேறு குற்ற வழக்குகள் (என்சிஆர்பி அறிக்கையின்படி) | |
|---|---|
| முதல் 5 மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
| உத்தர பிரதேசம் | 3,206 |
| பிகார | 2,862 |
| மகாராஷ்டிரம் | 2,208 |
| மத்திய பிரதேசம் | 1,832 |
| ராஜஸ்தான் | 1,804 |
| தமிழ்நாட்டில் 1,681 கொலை வழக்குகளும், புதுச்சேரியில் 28 கொலை வழக்குகளும் பதிவாகியுள்ளன | |

| முதியவர்களுக்கு எதிரான குற்றங்கள் | |
|---|---|
| முதல் 5 மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
| மத்திய பிரதேசம் | 5,738 |
| மகாராஷ்டிரம் | 5,115 |
| தெலங்கானா | 2,150 |
| தமிழ்நாடு | 2,104 |
| கர்நாடகம் | 1,840 |
| புதுச்சேரியில் 8 குற்றங்கள் பதிவாகியுள்ளன | |
| பொருளாதார குற்றங்கள் | |
| முதல் 5 மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
| ராஜஸ்தான் | 27,675 |
| தெலங்கானா | 26,88 |
| உத்தர பிரதேசம் | 23,428 |
| மகாராஷ்டிரம் | 19,803 |
| பிகார் | 12,006 |
| தமிழ்நாட்டில் 6,661 பொருளாதார குற்றங்களும், புதுச்சேரியில் 94 பொருளாதார குற்றங்களும் பதிவாகின. | |

| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | |
|---|---|
| முதல் 5 மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
| உத்தர பிரதேசம் | 66,381 |
| மகாராஷ்டிரம் | 47,101 |
| ராஜஸ்தான் | 45,450 |
| மேற்கு வங்கம் | 34,691 |
| மத்திய பிரதேசம் | 32,342 |
| தமிழ்நாட்டில் 8,943 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் பாலியல் வன்கொடுமை வழக்குகளின் எண் ணிக்கை 365. புதுச்சேரியில் 212 குற்றச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. | |

| பட்டியலினத்தவருக்கு எதிரான குற்றங்கள் | |
|---|---|
| முதல் 5 மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
| உத்தர பிரதேசம் | 15,130 |
| ராஜஸ்தான் | 8,449 |
| மத்திய பிரதேசம் | 8,232 |
| பிகார் | 7,064 |
| மகாராஷ்டிரம் | 3,024 |
| பட்டியலினத்தவருக்கு எதிராக தமிழ் நாட்டில் 1,921 குற்றங்களும், புதுச்சேரியில் 4 குற்றங்களும் பதிவாகியுள்ளன. | |

| சிறார்களுக்கு எதிரான குற்றங்கள் | |
|---|---|
| முதல் 5 மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
| மத்திய பிரதேசம் | 22,393 |
| மகாராஷ்டிரம் | 22,390 |
| உத்தர பிரதேசம் | 18,852 |
| ராஜஸ்தான் | 10,577 |
| அஸ்ஸாம் | 10,174 |
| தமிழ்நாட்டில் 6,968 குற்றச் சம்பவங்களும், புதுச்சேரியில் 156 குற்றச் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன | |

| பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் | |
|---|---|
| முதல் 5 மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
| மணிப்பூர் | 3,399 |
| மத்திய பிரதேசம் | 2,858 |
| ராஜஸ்தான் | 2,453 |
| மகாராஷ்டிரம் | 773 |
| ஒடிஸா | 662 |
| பழங்குடியினருக்கு எதிராக தமிழ் நாட்டில் 48 குற்றங்கள் பதிவான நிலையில், புதுச்சேரியில் எந்தக் குற்றமும் பதிவாகவில்லை. | |

| இணையவழி குற்றங்கள் |
|---|

| முதல் 5 மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கர்நாடகம் | 21,889 |
| தெலங்கானா | 18,236 |
| உத்தர பிரதேசம் | 10,794 |
| மகாராஷ்டிரம் | 8,103 |
| பிகார் | 4,450 |
| தமிழ்நாட்டில் 4,121 இணையவழி குற்றங்களும், புதுச்சேரியில் 147 இணையவழி குற்றங்களும் பதிவாகின. | |